**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

**<u>M.C.O.P.No.10/2024</u>**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 2 |
| பெயர் | .. | மோகன் |
| தகப்பனார் / கணவர் | .. | கண்ணன் |
| வயது | .. | 52 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | மாமண்டுர் |
| தாலுக்கா | .. | வெம்பாக்கம் |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ஆம் நாள் சனிக்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

நான் எந்த கிராமத்தை சார்நதவர் என்றால் மாமண்டுர். விபத்து எங்கு நடந்தது என்றால் வெம்பாக்கம் போகும் வழி, ஆனால் குறிப்பிட்டு எந்த ஊர் என்று தெரியாது. நான் வீட்டில் இருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டேன் என்றால் மாலை சுமார் 6.00 மணிக்கு புறப்பட்டேன். விபத்து நடந்த இடத்திற்கும் எங்கள் ஊருக்கும் எத்தனை கிலோ மீட்டர் என்றால் 15 கிலோ மீட்டர். இறந்தவர் பெயர் முத்து, அவரது வீடு எங்கள் வீட்டில் இருந்து நான்கு வீடு தள்ளி உள்ளது. அவர் எப்போது புறப்பட்டர் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் செல்வதற்கு முன்பாகவே விபத்து நடந்து முடிந்துவிட்டது என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் விபத்து யாரால் ஏற்பட்டது என்று அறுதியிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எத்தனை வாகனங்கள் இருந்தது என்றால் இரண்டு வாகனங்கள் இருந்தது, முத்து சென்ற வாகனம் புளு கலர் ஸ்கூட்டி, எதிரே வந்த வாகனம் கறுப்பு நிற பல்சர் ஆகும். மேற்படி விபத்திற்குள்ளான இரண்டு வாகனங்களும்

சாலைக்கு எந்த புறத்தில் இருந்தது என்றால் வலது பக்கத்தில் இருந்தது. 108 ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு நான் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் உள்ள பதிவேடுகளில் என்னிடம் கையொப்பம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான், நான் வாகனம் வருவதற்கு முன்பாகவே சென்று விட்டேன் என்பதால் வாங்கவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர். இறந்த முத்து வீட்டிற்கு நான் தான் தகவல் சொன்னேன். அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த முத்துவிற்கு எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்று பார்த்தேனா என்றால் காயங்களை பார்க்கவில்லை. இறந்த முத்துவை நான் மாலை சுமார் 6.40 க்கு பார்த்தேன். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், இறந்த முத்து என் வீட்டிற்கு பக்கத்து வீடு என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அதேபோல் விபத்தில் இறந்த முத்துவை நான் பார்த்து இருந்தால் முத்துவிற்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி எனக்கு தெரிந்து இருக்கும் என்றும், அவ்வாறு நான் முத்துவை பார்க்கவில்லை என்பதால் அதை பற்றி தெரியவில்லை என்றாலும் சரியல்ல. எதிரே பல்சர் வாகனத்தின் வந்தவரும், முத்துவும் அதே இடத்தில் தான் இருந்தனர், இருவரும் மயக்க நிலையில் இருந்தனர்.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**